Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஏடு 7 இதழ் 112

National Tamil Daily தேசிய தினசரி

(3-6-65)

விசுவாவசு வைகாசி 21 வைபர் பிறை 2 வியாழக்கிழமை

## உன்னைச்சொல்லிக் குற்றமில்லை.!

வவனியா. புதன்

வவனியாவிலிருந்து கண்டிக்கோ குருநாகலைக்கோ டெலிபோன்மூலம் தொடர்பு கொள்ள வேண்டுமாயின் குறைந்தது நான்கு அல்லது ஐந்து மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டும். ஆம்; அவ்வளவு மணிநேரம் 'டிலே' ஆகும். முல்லைத்தீவுக்கோ அல்லது மாங்குளத்துக்கோ தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் 'லைன்' முதலடைந்துவிட்டது என்ற பதிலைத்தான் கேட்கவேண்டும். 1965-ம் வருட ஆரம்பத்திலிருந்து 'விசேஷ கிரேட்' என உயர்ந்த அந்தஸ்த்தைப்பெற்றிருக்கும் வவனியா தபாற்கந்தோரிலுள்ள டெலிபோன் எக்ஸ்சேஞ் இந்த கதியில் இயங்குகிறது.

'உன்னைச் சொல்லிக்குற்றமில்லை, என்னைச் சொல்லிக் குற்றமில்லை, காலஞ்செய்த கோலமடி கடவுள் செய்த குற்றமடி' என்றஒருபாட்டு இருக்கிறது. இதேபோன்றுதான் 'எக்ஸ்சேஞ் காரர்களில் இதற்கான குற்றத்தை சுமத்திவிட முடியாதுபோலத்தான் தோன்றுகிறது.

வவனியா தபாற்கந்தோரிலுள்ள டெலிபோன் எக்ஸ்சேஞ் அறை தபாற்கந்தோரின் தரத்திற்கு மிக இழுக்குத்தேடுவதாக அமைந்துள்ளது. அதனுள் வேலைசெய்பவர்கள் மிக்க அசௌகரியங்களை மிக்க பொறுமையோடு தாங்கவேண்டியிருப்பதாக தெரிகிறது. எக்ஸ்சேஞ் சுவிச்போர்ட்டில் ஒரு சமயத்தில் வேலை செய்யக் கூடியதாக இருக்கிறதாம்: அவ்வளவு சிறியது அது.

இந்த சிறிய அறையிலுள்

(6-ம் பக்கம் பார்க்க)

# தேசிய மொழிகளில் அரசாங்க பரீட்சை

## மும் மொழித் திட்டத்தை விஸ்தரிக்க முடிவு

## ஆட்சி மொழிப் பிரச்னைக்கு இந்திய காங்கிரஸ் தீர்வு

புதுடில்லி, ஜூன் 2

**இந்தியாவின் சகல ராஜ்யங்களிலும் மும்மொழித்திட்டத்தை அமுல் செய்ய வேண்டுமென்றும் இதற்கான முழுப்பொறுப்பையும் ராஜ்ய அரசாங்கங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானித்துள்ளது. இந்திய அரசாங்க சேவைக்கான பரீட்சைகள் யாவும் இந்தியிலும் ஆங்கிலத்திலும் மட்டுமின்றி அரசியல் சாஸனத்தில் கண்டுள்ள இதர தேசிய மொழிகளிலும் நடைபெறவேண்டும் என்றும் காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானித்துள்ளது.**

காங்கிரஸ் காரியக்கமிட்டி நேற்றும் இன்றும் கூடிமொழிப் பிரச்னைபற்றி ஆராய்ந்தபின் இம்முடிவுசெய்யப்பட்டது.

இந்திய யூனியனின் ஆட்சி மொழியாகவும் இணைப்பு மொழியாகவும் இந்தியைப் பயனுள்ள வழியில் பயன்படுத்த பயனுள்ள திட்டங்களை உருவாக்கவேண்டுமென்றும் கமிட்டி தீர்மானித்தது.

இந்திய அரசாங்கசேவைக் கமிஷன் இந்திய யூனியன் அரசாங்க சேவைகளுக்காக நடத்தும் சகல பரீட்சைகளும் இந்தியிலும் ஆங்கிலத்திலுமட்டுமன்றி இந்திய அரசியல் சாஸனத்தில் கண்டுள்ள இதரதேசிய மொழிகளிலும் நடத்தவேண்டுமென்றும் இதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளவேண்டும் என்றும் காரியக்கமிட்டி தீர்மானித்தது. இப் பரீட்சைகளில் இந்தியிலும் ஆங்கிலத்திலும் ஒரு பாடம் கட்டாயமாக இருக்கும்.

ராஜ்யங்களில் இந்தி, ஆங்கிலம், பிராந்திய மொழி ஆகிய மும்மொழித் திட்டத்தை விஸ்தரிப்பது பிராந்திய மொழிகளைகவும் பல்கலைக்கழக மொழியாகவும் அமுல் நடத்தும் பொறுப்பை ராஜ்ய அரசாங்கங்களிடம் விட்டுவிடுவதென்றும் கமிட்டி தீர்மானித்தது. பிராந்திய மொழிகள் ராஜ்யத்தின் நிர்வாக மொழியாகவும் பல்கலைக்கழக மொழியாகவும் அமுல் நடத்தும் பொறுப்பு ராஜ்ய அரசாங்கங்களிடமே ஒப்படைக்கப்படும்.

இந்திய யூனியன் அரசாங்கசேவைக் கமிஷன் பரீட்சைகளில் தெரிவுசெய்யப்படுபவர்கள் இந்தி, ஆங்கிலம் தவிர அரசியல் சாஸனத்தில் குறிப்பிடுள்ள தேசியமொழிகளில் ஏதாவதொன்றில் தேர்ச்சி பெறவேண்டும்,

இந்தபோதனையின் தரத்தை உயர்த்துவது பற்றியும் ஆங்கிலத்தை முக்கியத்துவம்வாய்ந்த மொழியாகத் தொடர்ந்து உபயோகத்தில் வைத்திருப்பது பற்றியும் கமிட்டி ஆலோசனை செய்தது.

இந்தியை ஆட்சிமொழியாகவும் இணைப்பு மொழியாகவும் அபிவிருத்தி செய்வதற்குக் கட்டம் கட்டமாக நடவடிக்கை எடுப்பது பற்றியும் காரியக் கமிட்டி ஆலோசனை செய்தது.

இதர தேசிய மொழிகளின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் பற்றியும் கமிட்டி ஆலோசனை செய்தது.

கமிட்டிக்கூட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் சிறிது கருத்து வேற்றுமை நிலவிய போதிலும் முடிவுகள் ஏகமனதாகவே செய்யப்பட்டனவென்று கூட்டத்தின் பின்னர் பிரதமர் திரு லால்பகதூர் சாஸ்திரி நிருபர்களிடம் கூறினர்.

### அடுத்தகூட்டத்தில் திருத்தம்

ஆட்சிமொழிச் சட்டத்தில் திருத்தம்செய்வதற்கான மசோதாபார்லிமெண்டின் அடுத்தகூட்டத்தில் கொண்டுவரப் படுமென்றும் பிரதமர் தெரிவித்தார். இத்துடன் மொழி விஷயமாக நிலவும் வேறுபாடுகள் ஒரு முடிவுக்கு வந்து விடுமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்,

## ஒழுங்குகளை மீறிய ஆசிரியர் மீது நடவடிக்கை

### பிரதமர் முடிவு

பம்பலப்பிட்டி, புதன்

நிர்வாக ஒழுங்குவிதிகளை மீறிய அரசாங்க ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்று பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்கா தீர்மானித்துள்ளார்.

பிரதமமந்திரி காரியாலயத்திலிருந்து வெளியிடப்பட்ட செய்தி பின்வருமாறு:

பல ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் பிரதமமந்திரியைச் சந்தித்து தங்களைப் பாதிக்கும் சில விஷயங்களைக் கலந்தாலோசித்தனர், அப்பொழுது கல்விமந்திரியும் பிரசன்னமாயிருந்தார், பிரதமமந்திரி கல்விமந்திரியின் அநுசரணையுடன் சில முடிவுகளைச் செய்துள்ளார். தற்காலிகமாக வேலையிலிருந்தும் நிறுத்தப்பட்ட ஆசிரியர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், கல்விமந்திரி முன்னர் அறிவித்ததன்பிரகாரம் ஆசிரியர்களுக்கெதிராகப் புதிய புகார்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆசிரியர்கள் சம்பளப்பட்டியலில் இருந்து அங்கத்துவக் கட்டணம் அறவிடுவது கல்விமந்திரியினால் நிறுத்தப்பட்டிருந்தமுறை - மீண்டும் அமுலாகும். தங்கள் சம்பளப் பட்டியலில் இருந்து கட்டணம் அறவிடக்கூடாதென்று கோரும் ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

தற்பொழுது வேலையிலிருந்தும் விலக்கப்பட்ட ஆசிரியர்கள்மேல் தொடரப்படும் குற்றச்சாட்டு விசாரணைகள் விரைவில் முடியும்.

## இம்மாதம் 9-ந் திகதி யாழ். விளையாட்டரங்கு திறப்பு விழா

### மந்திரி சுகததாசா வருகிறர்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்கு இம்மாதம் 9-ந் திகதி போக்குவரத்து மந்திரி திரு வி. ஏ. சுகததாசாவினால் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

இந்த விளையாட்டு அரங்கின் முதல் கட்டமே பூர்த்தியாகியிருந்தாலும் தற்போது இதில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தக் கூடியதாக இருக்கிறதெனத் தெரிகிறது.

விளையாட்டரங்கு திறப்பு வைபவத்தை முன்னிட்டு மேற்கு ஜேர்மனியிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் ஐ. எட். சி. துஸல்டோர்ப் உதைபந்தாட்ட கோஷ்டிக்கும் இலங்கை உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையிலான உதைபந்தாட்டப் போட்டியொன்று புதிய விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கிறது. இந்த விளையாட்டரங்கின் வேலைகள் பூர்த்தியாகுவதற்கு இன்னம் ஏராளமான நிதி உதவி தேவைப்படுவதாக விளையாட்டரங்குக் குழுவினர் தெரிவித்துள்ளார்.

## மாநகரசபை அங்கத்தவர்ராஜினுமா?

நுவரேலியா, புதன்

நுவரேலியா மாநகரசபையின் 10- வட்டார அங்கத்தவர் திரு. ராஜா சனிவாரத்து தமது அங்கத்தவர் பதவியிலிருந்து ராஜினுமாச் செய்துள்ளார்.

## கருத்தடை மாத்திரை

கொழும்பு புதன்

லண்டனிலிருந்து கொழும்புக்கு கடத்திவந்ததாகக் கூறப்படும் கருத்தடை மாத்திரைகளை [illegible] துறைமுகத் தொழிலாளர்கள் தங்கள் வீடுகளுக்குக் கொண்டுசென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது

## 120 பேர் தோற்றினர்: 16 பேரே சித்தி

பம்பலப்பிட்டி, புதன்

சென்றவருடம் சார்ட்டட் அக்கவுண்டன்சிபரீட்சைக்குதோற்றிய 120 பேரில் 16 பேர் மட்டுமே சித்திபெய்தியுள்ளார்கள்.

## அயூப்-சூ. சந்திப்பு

ராவல்பிண்டி, ஜூன் 2

சீனப் பிரதமர் சூ-என்-லாய் இன்று காலை ராவல்பிண்டிக்கு வந்தபொழுது அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. பாகிஸ்தான் அதிபர் அயூப் கானுடன் திரு. சூ-என்-லாய் பேச்சு வார்த்தை நடத்தினர்,

## வீட்டுத்தட்டுப்பாடு நீக்கத் திட்டம்

பம்பலப்பிட்டி, புதன்

நாட்டிலுள்ள வீட்டுத்தட்டுப்பாட்டுப் பிரச்னையைத் தீர்க்கும் பொருட்டு தொழில் வீடமைப்பு மந்திரி திரு எம். ஹ. முகமது ஐந்தாண்டுத் திட்டமொன்றை உருவாக்கியுள்ளார்.

இத்திட்டத்தின்படி மத்திய அரசாங்கத்தின் பணத்திலிருந்து 25,000 வீடுகள் கட்டப்படும். இவ்வீடுகள் யாவும் கொழும்பிலேயே கட்டப்படும்.

## மதங்கள்பற்றிய படக்காட்சி

யாழ்ப்பாணம், வியாழன்

இந்துமதம், பௌத்த மதம் ஆகிய மதங்களைபற்றிய திரைப்படமொன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இன்று மாலை 6 மணிக்கு இலவசமாகக் காண்பிக்கப்படவிருக்கிறது.

அகில இலங்கை சாந்திய சேவா சங்க ஆதரவில் காண்பிக்கப்படவிருக்கும் இத்திரைப்படத்தை இங்கு காண்பிக்க பிரசாரகரான கல்வி ஆலோசகர் டாக்டர் (செல்வி) ஈ. எம். தில்லையம்பலம் உதவியுள்ளார்.

களிகமுவா, புதன்

'மார்க்ஸிஸத்துடன்பௌத்த மதத்தை ஒப்பிடுவது அர்த்தமற்றது. மார்க்ஸிஸம் இரத்தவெறி கொண்டது. பௌத்த மதம சகிப்புத் தன்மையைப் போதிக்கின்றது.

இவ்வாறு வணமல்மடுவார டீணசேர தேரோ, சுகாதார உதவிமந்திரி திருமதி விமலா கன்னங்கராவுக்கு களிகமுவா தொகுதியில் அளிக்கப்பட்ட வரவேற்புபசாரவைபவமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்திய பாகிஸ்தான் எல்லைத்தகராறு

# "யுத்தத்தை பாகிஸ்தான் விரும்பவில்லை" —அயூப்

# "அமைதித் தீர்வே இந்தியாவின் ஆவல்" —சுவர்ண்சிங்

## "சமரசமுயற்சி வெற்றிதரும் என நம்புகிறேம்" —பிரி. மந்திரி

கராச்சி, ஜூன் 2

"ரன்-கட்ச் எல்லைத் தகராறு மட்டுமல்ல இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே தீர்க்கப்படாமலுள்ள சகல பிரச்னைகளுக்கும் சமாதானத் தீர்வு காணவேண்டுமென்பதே இந்தியாவின் ஆவல்" என்று இந்திய வெளிவிவகார மந்திரி திரு. சர்தார் சுவர்ண்சிங் கென்யா செல்லும் வழியில் கராச்சி விமானநிலையத்தில் பத்திரிகை நிருபாகளிடம் கூறினர்.

படைபலத்தாலோ படைபலம் பற்றிய மிரட்டலினலோ எப்பிரச்னைக்கும் அமைதித் தீர்வு கண்டுவிடமுடியாது என்று திரு. சுவர்ண்சிங் கூறினர்.

### நைரோபியில்

கென்யா தலைநகரான நைரோபிக்கு வந்துசேர்ந்த இந்திய வெளிவிவகார மந்திரி திரு. சர்தார் சுவர்ண்சிங் விமானநிலையத்தில் நிருபர்களிடம் பேசுகையில் கென்யா அதிபர் திரு. ஜோமோகென்யாட்டாவைச் சந்திக்கத் தாம் ஆவலுடன் இருப்பதாகவும், இரு நாடுகளுக்கிடையிலுமுள்ள விஷயங்கள் பற்றியும் சர்வதேச விஷயங்கள் பற்றியும் தாம் அதிபர் கென்யாட்டாவுடன் பேசவிருப்பதாக அவர் சொன்னர். இரு நாடுகளுக்குமிடையில் நெருங்கிய நட்புறவிருப்பதாகவும் நடுநிலைமைக் கொள்கையும் சமாதான சகவாழ்வுக் கொள்கையும் இரு நாடுகளுக்கும் பொதுவான கொள்கையென்றும் சுவர்ண்சிங் சொன்னர்.

### அயூப்கானின் கருத்து

மாதத் தொடக்கத்தில் நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் செய்தி விடுக்கும் பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூகான் நேற்றிரவு விடுத்த செய்தியில் இந்திய பாகிஸ்தான் எல்லைத்தகராறு பற்றிக் குறிப்பிட்டார்.

இந்தியாவுடனுள்ள தகராறுகளைச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்த்துக்கொள்ள பாகிஸ்தான் ஆவல்கொண்டுள்ளது என்று அதிபர் அயூப்கான் கூறினர்.

பாகிஸ்தான் யுத்தத்தை விரும்பவில்லை. பாகிஸ்தானும் இந்தியாவும் யுத்தம்செய்யக்கூடிய நிலையிலில்லை. இருநாடுகளும் அபிவிருத்தியில் கவனம் செலுத்தவேண்டியுள்ளன என்று அயூப்கான் கூறினர்.

ரன்-கட்ச் எல்லைத் தகராறு இந்தியா-பாகிஸ்தான் உறவு நிலைக்கு ஒரு அறிகுறி தான் என்றும் இரு நாடுகளுக்கிடையிலுமுள்ள பிரச்னைகளை அமைதியாகத் தீர்க்க இந்தியா உண்மையில் முயற்சி செய்யவேண்டுமென்றும் பாகிஸ்தான் அதிபர் சொன்னர். பாகிஸ்தான் எல்லையில் இந்தியா படைகளைக் குவித்து வருவதாகக் குற்றஞ்சாட்டிய அயூப்கான் இந்தியத் துருப்புக்களுக்கு பதிலடிகொடுத்து விரட்டியடிக்க பாகிஸ்தான தயாராக இருப்பதாகவும் எல்லைப் பகுதிக்குத் தாம் சென்று பார்வையிட்டபோது பாகிஸ்தான் துருப்புக்கள் உற்சாகத்துடன் இருப்பதாகவும் அவர் சொன்னர்.

ஷேக் அப்துல்லா மீண்டும் காவலில் வைக்கப்பட்டது பற்றி அயூப்கான் தனது உரையில் குறிப்பிட்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் குரலை அடக்கிவிடமுடியாதென்றும் இந்தியா உணர்ந்து கொள்ளவேண்டுமென்றும் கூறினர்.

### பிரிட்டிஷ் மந்திரி நம்பிக்கை

இந்திய-பாகிஸ்தான் எல்லையில் ரன்-கட்ச் தகராறுக்கு இரு நாடுகளும் ஒரு சமரசத் தீர்வு காண்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சி வெற்றியளிக்குமென நம்பிக்கையிருப்பதாகப் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் காமன்வெல்த் காரியதரிசி திரு. பொட்டம்லி தெரிவித்தார். இந்திய எல்லையில் சில அபாயமிருப்பதால் இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களுக்குள் உள்ள தகராறுகளை நீடிக்கவிடக்கூடாதென்று திரு. பொட்டம்லி கூறினர்.

## கோபாலன் மனு விசாரணை

புதுடில்லி, ஜூன் 2

காவலிலிருக்கும் இடதுசாரி சமூனிஸ்ட் தலைவர் திரு. ஏ. கே. கோபாலன் தாக்கல்செய்த ஆள் ஆஜர் மனுவை கோடை கால விடுமுறைக்குப் பின் சுப்ரீம் கோட் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்.

## நீலகிரியில் காய்கறி உற்பத்தி

சென்னை, ஜூன் 2

தமிழ்நாட்டில் நீலகிரியில் காய்கறி, கிழங்கு, பழவகைகள் பெருமளவில் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மேற்குஜெர்மன் அரசாங்கம் பன்னிரண்டு லட்சம் ரூபாய் உதவியளிக்கவிருக்கிறது.

## சுரங்க விபத்தில் 256 பேர் பலி

டோக்கியோ, ஜூன் 2

ஜப்பானின் தெற்கே உள்ள சுரங்கமொன்றில் நேற்று ஏற்பட்ட வெடி விபத்தில் 256 பேர் மாண்டு போனதாக அஞ்சப்படுகிறது. இதில் 186 சடலங்கள் மீட்கப்பட்டுவிட்டன. மிகுதிச் சடலங்கள் மீட்கப்படக்கூடியநிலையில் இல்லையாம்.

## பாதிரிகளுக்கு சிறைத் தண்டனை

ஹாவாய், ஜூன் 2

அமெரிக்காவுக்காக வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக மூன்று பெண்பாதிரிகள் உட்பட 20 பாப்டிஸ்ட் பாதிரிகளுக்கு கியூபா இராணுவ நீதிமன்றம் மூன்று இரண்டு வருடத்திலிருந்து 30 வருடம் வரையான கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது.

## சஞ்சீவரெட்டி

மாஸ்கோ, ஜூன் 2

இந்திய எஃகுவளராக மந்திரி திரு. என். சஞ்சீவரெட்டி நேற்று உக்ரேனிய நிலக்கரிச் சுரங்கத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

# வியட்நாம் சண்டையை நிறுத்த ரஷ்யவுக்கு ஆலோசனை

## பீகிங்கையும் ஹனேயையும் வற்புறுத்துமாறு ஆஸி. கோரிக்கை

சிட்னி, ஜூன் 2

வியட்நாமில் சண்டையை நிறுத்துவதற்கு சீனவையும் வட வியட்நாமையும் தூண்டுவதற்கு சோவியத் யூனியன் தனது செல்வாக்கைப் பிரயோகிக்கவேண்டுமென்று ஆஸ்திரேலிய அரசாங்கம் கேட்டுள்ளது.

தென் வியட்நாமுக்கு படைகளை அனுப்பி உதவி புரிவதென ஆஸ்ரேலிய அரசாங்கம் செய்தமுடிவைக்கண்டித்துசோவியத் யூனியன் அனுப்பியிருந்த ஒருகுறிப்புக்கு பதில் அனுப்புகையிலேயே ஆஸ்ரேலிய அரசாங்கம் இவ்வாறு கேட்டுள்ளது.

வடவியட்நாமும் அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களும் வடவியட்நாமின் அண்டைநாடுகளை நிம்மதியாக வாழவிடாதவரையில் அண்டைநாடுகளின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்கு அவசியமானல் படைகளையும் அனுப்புவதைத்தவிர ஆஸ்ரேலியாவிற்கு வேறுவழியில்லை என்றும் ஆஸ்திரேலியா மாஸ்கோவுக்கு அனுப்பியுள்ள தனது பதில் குறிப்பில் தெரிவித்துள்ளது.

### சண்டை நீடிப்பு

வடவியட்நாமின் முக்கியநிலைகள்மீது நேற்று அமெரிக்க போர் விமானங்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தின. சாலைகள், பாலங்கள் தாக்கப்பட்டன. இரண்டு வடவியட்நாம் போர்விமானங்களும் சுட்டுவீழ்த்தப்பட்டன. இரு அமெரிக்க ஜெட்விமானங்களும் சுட்டுவீழ்த்தப்பட்டன. வடவியட்நாம் தலைநகரான ஹனேய்க்குத் தெற்கே 45 மைல் தூரத்தில் தாக்குதல்கள் நடைபெற்றன.

இரு தினங்களுக்கு முன் பார்ஜியா என்ற இடத்தில் வடக்கு வியட்நாம் கொரில்லாக்கள் கடும் தாக்குதல் நடத்தி தென் வியட்நாம் அரசாங்கத் துருப்புக்களுக்கு முன்னெப்பொழுதுமில்லாதவாறு பெரும் சேதம் ஏற்படுத்திய பின் அவ்விடத்திலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கின்றன.

### மந்திரிசபை நெருக்கடி

தென்வியட்நாம் மந்திரிசபையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகத் தோன்றியுள்ள நெருக்கடியைத் தீர்த்து நிலைமையை சீராக்குவதில் சைகோனிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் திரு கப்பாட்லொட்ஜ் தீவிரமுயற்சி செய்து வருகிறர். வாஷிங்டன் செல்லவிருந்த அவர் தமதுபிரயாணத்தை காலவரையின்றி ஒத்திவைத்துள்ளார்.

# அணு மின்விசைக் கலங்கரை விளக்கம்

நியூயோர்க், ஜூன் 2

அணுவிசையால் இயங்கும் உலகிலேயே முதலாவது கலங்கரை விளக்கம் வியாழக்கிழமையன்று தனது இரண்டாவதாண்டுப் பணியைத் தொடங்கியது.

1964 மே 20-ம் தேதி பணி தொடங்கிய இவ்வொளி விளக்கு மேரிலாந்து மாநிலத்தில் செஸபிக்குடாவில், பால்டிமோரில் இருக்கும் யு. எஸ். கடற்கரைப் பாதுகாப்புப் படையின் கலங்கரை விளக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. கதிரியக்க ஐசோடோப் ஸ்ட்ரான்ட்டியம் டிட்டனேட் இதற்கு மின்விசை அளிக்கிறது.

பத்தாண்டுக் காலம் யாதொரு பராமரிப்புமின்றிப் பணியாற்ற அமைக்கப்பட்டிருக்கிறது. அடிக்கடி மாற்ற வேண்டியிருக்கும் மின்கலங்களுக்குப் பதில் அணுவிசை இயந்திரம் இதில் அமைக்கப்பெற்றுள்ளது.

முழுக்க முழுக்க நம்பிருக்கக்கூடிய வகையிலும் பொதுவாக மிகச் செம்மையாகவும் இந்த அணுவிசைக் கலங்கரை விளககம் பணியாற்றியுள்ளதாக கடற்கரைப் பாதுகாப்புப்படை அறிவித்தது.

இதேபோன்ற யு. எஸ். அணுவிசை உற்பத்திக்கருவிகள் 1961-ல் விண்வெளியில் செலுத்தப்பட்ட செயற்கைக் கோள்களுக்கு விசை வழங்கின. தற்சமயம் வடதுருவம், தென்துருவம், மெக்ஸிக்கோ வளைகுடா ஆகியவற்றில்தானே இயங்கும் வானிலை அறிவிப்பு நிலையங்களுக்கும் செஸபிக் வளைகுடாவில் கப்பல்போக்குவரத்து வழிகாட்டும் மிதவை, அட்லாண்டிக் பெருங்கடலில் இருக்கும் கட்டடி ஒலிவிளக்கு ஆகியவற்றிற்கு மின்விசை வழங்குகின்றன.

இதற்கிடையே விண்வெளியில் சுற்றிவரும் ஸ்நாப் 10-ஏ அணுஉலை 43 நாட்கள் வெற்றிகரமாகப் பணியாற்றியபின் செயலிழந்தது. இதற்குக் காரணம் தெரியவில்லை என்று யு. எஸ். அணுவிசைக்குழு (ஏ. இ. ஸி.) வியாழக்கிழமை அறிவித்தது.

இதுவே விண்வெளியில் சுற்றிவரும் உலகின் முதலாவது அணுஉலை. விண்வெளிக் கப்பல்களுக்கு உள்ளே வேண்டிய மின்விசையை பெருமளவில் வழங்கப்போகும் மின்விசை உற்பத்திக் கருவிகளுக்கு இது முன்னேடி. இந்த உலை 1965 ஏப்ரல் 3-ம் தேதி யு. எஸ். மேற்குக் கடற்கரையிலிருந்து செலுத்தப்பட்டது.

ஸ்நாப் 10-ஏ இருக்கும் செயற்கைக்கோள் விண்வெளியில் இருந்துகொண்டு பூமியை 112 நிமிடத்திற்கு ஒரு தடவை சுற்றிவந்துகொண்டிருக்கிறது. 3000 ஆண்டுகளுக்கு மேல் அது விண்வெளிப்பாதையில் இருந்து வரும் என்று ஏ. இ. ஸி. கூறியது.

அணுஉலை செயலிழந்ததற்குக் காரணம் தெரியவில்லை. குறைந்தது ஆறு மாதத்துக்கு வேலை செய்யும்படி அது அமைக்கப்பட்டிருந்து என்று ஏ. இ. ஸி தெரிவித்தது.

யு. எஸ். பிரதிநிதிசபை வியாழக்கிழமை அங்கீகாரம் தந்த ஏ. இ. ஸி. பட்ஜெட்டின் இலட்சியங்களில் மின்விசை உற்பத்திக்கும் உப்பு நீக்குவதற்கும் சிறந்த அணுஉலைகளை கட்டுவதும் ஒன்று. ஏ. இ. ஸி பணிகளுக்கு ஜூலை 1-ம் திகதியுடன் தொடங்கும் ஆண்டில் 255,55,21,000 டாலர் செலவாகும். இந்த மானியம் ஒதுக்கும் மசோதா ஆதரவாக 350 வோட்டுகளை பெற்று நிறைவேறியது. இதே மாதிரி மசோதா செனட்சபையில் இருக்கிறது.

அமைதிப் பணிக்கு அணுதிட்டங்களுக்கு அதிகப் பணமும், அணு ஆயுதங்களுக்குக் குறைவாகவும் ஒதுக்கப்பட்டிருப்பதை பட்ஜெட் குறிப்பிடுகிறது. அணுஆயுத எரிபொருள் உற்பத்தியின் விகிதத்தைக் குறைக்க ஜனதிபதி செய்த முடிவை இது பிரதிபலிக்கிறது. சென்ற ஆண்டு இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

## 'என்னைக் கொலை செய்ய சதி'

### பிபிலை எம். பி. தகவல்

பதுளை, புதன்

தம்மைக் கொலைசெய்வதற்கு இங்கு சதி நடப்பதாகத் தாம் சந்தேகிப்பதாக பிபிலை எம் பி திரு. தர்மதாஸ பண்டா இங்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரக்கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

ஊவா மாகாணத்தைச் சேர்ந்த ஐ. தே. கட்சி எம் பிக்களுக்கு இங்குள்ள வாலிப முன்னணியினால் அளிக்கப்பட்ட வரவேற்புபசாரக்கூட்டத்தில் பேசுகையில்தான் அவர் மேற்கண்டவாறு கூறினர்.

'நான் சில சமயங்களில் கொலைசெய்யப்பட்டால், இந்த நாட்டின் ஒற்றுமைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் உழைப்பதற்காகபலர்தோன்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை' என்றும் திரு. பண்டா தமது உரையின்போது தெரிவித்தார்.

திரு. ஜினதாஸ சேனநாயக்கா பேசுகையில், நாட்டின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு தேசிய அரசாங்கத்துக்கு சிறிதளவுகாலமாவது தேவையென்று சொன்னர்.

வெலிமடை எம். பி. பேர்ஸி சமரவீரா உட்பட வேறுபலரும் பேசினர்.

## இலங்கை—சோவியத் நட்புறவுச் சங்கம்

வவுனியா, புதன்

இலங்கை—சோவியத் நட்புறவுச்சங்கத்தின் வவுனியாக் கிளைக்கூட்டம் சென்றமாதம் 29-ம் திகதி வவுனியா நகரசபைமண்டபத்தில் வவுனியா பண்டாரிக்குளம் நகரசபை அங்கத்தவரும் உபதலைவருமான திரு. ந. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ரஷ்யாவில் இருந்து வந்த சோவியத் சுப்ரீம் பாராளுமன்ற சங்கத்தினர் ஒருவரும், விஞ்ஞானி ஒருவரும், சோவியத்நட்புறவுச்சங்கங்களின் முதலாவது பொதுச்செயலாளராவன ஒரு பெண்ணும் இக் கூட்டத்தில் கலந்து உரைநிகழ்த்தினர்

திரு. எம். ஆர். சங்கரலிங்கத்தின் யோகாசனப்பயிற்சியையும் அவரின் கட்ம்வாத்திய கச்சேரியையும் சோவியத் பிரமுகர்கள் பார்வையுற்றனர்.

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

ஊர்காவற்றுறை, புதன்

புங்குடுதீவு 'நசரேத்' சனசமூ நிலையத்தின் 10-வது ஆண்டுவிழா யாழ்ப்பாண மாவட்ட சனசமூகநிலையங்கள் சமாசக காரியதரிசி திரு. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

ஆண்டுவிழாவை யொட்டி நிலைய இல்லங்களிடையேவிளையாட்டுப் போட்டியும் நடைபெற்றது. நீல இல்லம் முதலாவது இடத்தையும், வெள்ளை இல்லம் இரண்டாவது இடத்தையும் பெற்றன. திரு. துரைசிங்கம் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினர்

"சத்தியவான் சாவித்திரி" ... "நசவாரக் கார்த்திகேசு" என்ற நாடகமும் நடைபெற்றது.

## ஏற்பினல் சிசு மரணம்

யாழ்ப்பாணம், புதன்

சிசுவின் தொப்பூழ் கொடியைச் சுறன் படித்த கொடுவாள் கத்தியால் வெட்டியதால் ஏற்பு ஏற்பட்டு அக் குழந்தை மரணமான சம்பவமொன்று திட்டியில் நடைபெற்றுள்ளது.

சின்னவி சின்னத்தம்பியின் குழந்தையான நடராசா என்ற சிசுவின் மரணம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் நகரப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு ஏ அமிர்தலிங்கம் நடத்திய மரணவிசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது

காலஞ்சென்ற குழந்தையின் தந்தை சின்னத்தம்பி சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

5 நாட்களுக்கு முன்பு என் குழந்தை பிறந்தது. எனது மனைவிக்குப் பிரசவவேதனை கண்டதும், நான் கார்பிடித்து வருவதற்குச் சென்றேன். நான் திரும்பி வருவதற்குள் எனது மனைவி பிரசவித்துவிட்டாள் அடுத்த வீட்டில் வசிக்கும் எனது மனைவியின் தாயார் வந்து குழந்தையின் தொப்பின் கொடியை மீன் வெட்டுவதற்குப் பாவிக்கும் கத்தியால் வெட்டினர். மறுநாள் குழந்தைக்கு வலிப்பு ஏற்பட்டது உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குழந்தை அங்கே மரணமானது

டாக்டர் செல்வி எஸ் ராசலிங்கம் சாட்சியமளித்தபோது ஏற்பினல் மரணம் நிகழ்ந்ததெனக் கூறினர்

தீய நிகழ்ச்சியால ஏற்பட்ட மரணமென மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

மரணவிசாரணை அதிகாரி கூறியதாவது:-

யாழ்ப்பாணத்திலுள்ள திட்டிக்கும் அரசாங்க ஆஸ்பத்திரிக்கும் ஒரு மைல் தூரம்தான் இப்பகுதியைச் சுற்றி அநேக ...விப்பட்ட டாக்டர்கள் இருக்கிறார்கள் மருத்துவ தாதிமார்களும் மற்றும் வைத்திய அதிகாரிகளும், வீட்டிற்கு வீடு சென்று பிரசவ தாய்மார்களுக்கும்மற்றவர்களுக்கும் குழந்தைபிறப்பு குழந்தை வளர்ப்பு பற்றி ஆலோசனை செய்துவருகிறார்கள் இப்படியிருந்த போதிலும் இப்பெண் தனிமையில் உதவியற்று குழந்தையைபெற்றிருக்கிறார் அக்குழந்தைக்கு நாகரிகமற்றதும் அஞ்சத்தக்துமான சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது,

## புதிய பஸ் சேவை

காங்கேசன்துறை, புதன்

மயிலிட்டிக் கரையிலிருந்து மல்லாகம் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு பஸ் சேவை இன்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

இந்தச் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும் வண்ணம் மயிலிட்டிக்கரை சனசமூக சங்கத்தினர் காங்கேசன்துறை எம். பி, திரு. எஸ், ஜே. வி, செல்வநாயகத்லைசில வாரங்களுக்கு முன்னர் கேட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சேவை சமக்காரர்களுக்கும் ஏனைய தொழிலாளர்களுக்கும் மிகவும் உதவியாக இருக்கும் எனத் தெரிய வருகிறது

## 'மனிதர்கள் என்ற உணர்வு வேண்டும்'

குரும்பசிட்டி, புதன்

"அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இரத்தவெறி கொண்டு வடவியட்னுமிலே தாக்குதல் நடத்தி பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் வேளையிலே உலகசமாதானத்தைபற்றி நாம் சிந்திக்கிறோம். மொழி இனம், மதம் என்ற குறுகிய மனப்பான்மையிலிருந்து விடுபட்டு உலகத்தவர் மனிதர்கள் என்ற உணர்வுமக்கு ஏற்படவேண்டும், அப்போதுதான் உலகசமாதானம் உருவாகமுடியும்", என சன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உயர்தர வகுப்புமாணவர் மன்றக் கூட்டத்தில "உலகசமாதானம்" என்ற பொருள் பற்றி திரு பொயினிக் ஜீவா பேசுகையில் குறிப்பிட்டார்.

## அபாய நிலையில் உள்ள மதகு

ஊர்காவற்றுறை, புதன்

மடத்துவெளி அம்மன் கோவில் வீதியல் குறிச்சிக்காடு சந்தியில் உள்ள மதகு உடைந்து அபாயநிலையில் இருக்கிறது. தினமும் இவ்வீதியால் பல போக்குவரத்து நடைபெற்று வருவதால் இம்மதகு உடனடியாகத் திருத்தம் செய்யப்படவேண்டியது அவசியமாகும். இம்மதகின் இரு பக்கங்களிலும் நாட்டப்பட்டிருந்த 'அபாய அறிவித்தல்' தற்பொழுது அகற்றப்பட்டுள்ளதால், வீதியின் நிலைபற்றி அறிந்துகொள்வது புதிய வாகனச் சாரதிகளுக்கு கஷ்டத்தை உண்டுபண்ணுகின்றது.

## பணம்மறைந்தது

மிலுவாங்கொடை புதன்

கூட்டுறவு மொத்த விற்பனைஸ்தாபன இரும்புப் பெட்டியிலிருந்து 9,887 ருபா மாயமாக மறைந்தது. மிலுவாங்கொடை பொலிஸாருக்கு பெரும் திகைப்பையளித்துள்ளது.

மூன்று நாட்களுக்கு முன் கடைபூட்டப்பட்டிருந்தகாகவும் பொலிஸார் சோதனையிட்ட பொழுது பணம் மாயமாக மறைந்திருந்ததாகவும், இது பற்றி கூறப்படுகிறது. பொலிஸார் விசாரணை செய்து வருகின்றார்கள்.

## இணுவிலில் சிரமதானம்

யாழ்ப்பாணம், சிவா

இணுவில் தேசியவிவசாயிகள் சழகத்தைச்சேர்ந்த நாற்பதுக்கு மேற்பட்ட தொண்டர்கள் வரும் ஞாயிறுக்கிழமை இணுவில் காரைக்கால் சிவன் கோவில் வீதிகளையும் அதன் அருகாமையிலுள்ள மயானத்தையும் சிரமதானம்மூலம் சுத்தம்செய்வதற்கு முன்வந்துள்ளார்கள்.

## பஸ்ஸிலிருந்து தவறி விழுந்து மரணம்

முள்ளியவளை, புதன்

வவுனியா ஆசிக்குளத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி பொன்னையா என்ற வயோதிபர் பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் பஸ்ஸிலிருந்து தவறி கீழே விழுந்ததால் பரிதாபகரமான மரணத்துக்குள்ளானர். முல்லைத்தீவிலிருந்து நாயாறு சென்று கொண்டிருந்தபோது தான் இச் சம்பவம் இடம்பெற்றதெனக் கூறப்படுகிறது.

காலஞ்சென்றவர் பஸ் வாசலுக்கு அருகாமையில் நின்று கொண்டிருந்து பிரயாணம் செய்தாரென்றும், திடீரெனக் கைதடுமாறிக் கீழே விழுந்தாரென்றும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி பஸ்ஸை ஓட்டியசாரதி இராஜபக்சா தாமசேன என்பவரை விளக்க மறியலில் வைக்கும்படி மரணவிசாரணை நடத்திய முல்லைத்தீவு அடிசனல் மாஜிஸ்டிரேட் திரு கே வி நவரத்தினம் உத்தரவிட்டார்.

## மருத்துவப் பெண் இல்லை

ஊர்காவற்றுறை, புதன்

புங்குடுதீவு கிழக்கில் மருத்துவப்பெண் கடந்த ஆறுமாதகாலமாய் இல்லாமையால் கர்ப்பிணிகள் நலம் பாதிக்கப்படுவதாய் அறியப்படுகிறது. இப்பகுதியில் கடமையாற்றிய மருத்துவப்பெண் இடமாற்றம் செய்யப்பட்டபின் காலியான இந்தஇடத்திற்கு இதுவரை மருத்துவமாது நியமிக்கப்படவில்லை.

புங்குடுதீவு கிராமசபைத் தலைவர் இதுபற்றி சுகாதாரப் பகுதிக்குத்தெரியப்படுத்தியுள்ளாரெனக் கூறப்படுகிறது,

## அவசரத் தந்திபற்றி நடவடிக்கை

பம்பலப்பிட்டி, புதன்

"ஓவர்டைம்" வேலைசெய்வதை குறைப்பதற்காகவும், அவசரத் தந்திகளை துரிதமாக அனுப்புவதை ஆராயும் பொருட்டும் கொழும்பு மத்தியதந்தி இலாகாவில் ஓர் சபையை நியமிப்பதற்கு தற்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

## எம். பிக்கு வரவேற்பு

ஊர்காவற்றுறை, புதன்

தீவுப்பகுதி எம். பி. திரு வ. நவரத்தினத்திற்கு புங்குடுதீவு மக்கள் சார்பில் ஒரு வரவேற்பளிக்கப்பட்டது.

உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம், கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுபிள்ளை உட்பட திரு. நவரத்தினம் புங்குடுதீவு மடத்துவெளியிலிருந்து ஊர்வலமாகச் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அழைத்துவரப்பட்டார்.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீவுப்பகுதி எம், பியைப் பாராட்டிப் பல பிரமுகர்கள் பேசினர்.

# தேசிய அரசாங்கம் வஞ்சம் தீர்க்கிறதாம்

### சிங்கள தினசரி கூறுறு

பம்பலப்பிட்டி, புதன்

'ஐக்கிய தேசிய - தமிழரசுக் கட்சி அரசாங்கம், முற்போக்கு கொள்கை உடைய அரசாங்க அதிபர்கள் மேல் தவனைாஞ்சுவாலினுல் வஞ்சம் தீர்த்துவருகிறார்கள். குறிக்கப்பட்ட 11 உத்தியோகத்தர்களும் சிங்களத்தில் தேர்ச்சியுள்ளவர்கள் என்ற போர்வையில் அவர்களை இடமாற்றம் செய்யத் திட்டமிட்டுள்ளது. அவர்கள் செய்த குற்றம் என்னவென்றால் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர்களினுல் கொடுக்கப்பட்ட உத்தரவு மேற்கொள்ளாது நடுநிலைமையில் நின்று தமது கடமையைக் கடந்த தேர்தலில்செய்ததே முக்கிய காரணமாகும்,

இவ்வாறு 'அத்தா' என்ற சிங்கள தினசரி செய்திவெளியிட்டுள்ளது,

மாற்றப்படவிருக்கும் அரசாங்க அதிபர்கள் திரு. விக்குணசேகரா கேகாலை, திரு இலான்சில்வா - களுத்துறை, திரு. யுபனி குணரத்தின - கண்டி, திரு கெமசிறி பிரேமவர்தன - அனுராதபுரம், திரு. பி. டி. உடவெல - பதுளை, திரு ஆர். எம், பி. சேனநாயகா- வவுனியா, திரு. வி, புனத்தென - மாத்தளை திரு. கவில் ஜெயவீரா - யாழ்ப்பாணம், திரு. ஏச். எம். அமித் - காலி திரு கதிர்காமநாதன் - அம்பாந்தோட்டை

## விசாரணை ஒத்திவைப்பு

பருத்தித்துறை, செவ்

200 ரூ தகல் அபின் வைத்திருந்ததாயும், கடத்த முயற்சித்ததாயும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அருணம்பலம் பாலசுப்பிரமணியம், கந்தசாமி மார்க்கண்டு பருத்தித்துறையைச்சேர்ந்த மாணிக்கம் கோபால் ஆகிய மூவர் மீதும் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு, ஜெபேம்கில்லா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

காங்கேசன்துறையைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு, கரசும், சிறுப்பர் ஏ. குமாரசாமி, புஞ்சபண்டா திசநாயக்கா ஆகியோர் சாட்சியமளித்த பின் மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## கார்த்திகைத் திருவிழா

ஊர்காவற்றுறை,புதன்

புங்குடுதீவு-மடத்து வெளி ஸ்ரீபாலசுப்பிரமணிய தேவஸ்தானத்தில் சென்ற சனிக்கிழமை இரவு கார்த்திகைத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது'

தேவஸ்தான சூழ்வினரின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம் பெற்றது.

REGAL – JAFFNA
NOW SHOWING
Anthony Quinn
Gina Lollobrigida
in
HUNCHBACK
OF
NOTRE DAME
(Cinemascope - Color)

ரெமி பொரட்டேட் டல்கம் பவுடர்




ரெமி பவுடரைப் பாவித்திருக்கிறீர்களா? சிறந்த பவுடருக்கு இணையான இந்த உயர்ந்த பவுடர் - வெகு நியாயமான விலைகளில் கிடைக்கும். அதி உன்னத மூலப் பொருட்களினுல் ஆக்கப்பட்ட ரெமி மிக லளிதமாக வாசனையூட்டப்பட்டுள்ளது. உங்கள் வியாபாரிகளிடத்தில் 2 சைஸ் டின்களில் கிடைக்கும்.

ஆவ்ரா அன் கம்பனி,
19, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 7211, 7212

வெற்றிகரமான 4வது வாரம்!

சிங்கப்பூர் பிளாசா (கொழும்பு) (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மகேகன்னப்பு) விஜிதா (வடட்டன்) தீவோலி (நுவரேலியா)
வெம்பிலி (கண்டி) மொடேர்ன் (பதுளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30 பி. ப. 2-30 6-30 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ்.ஆர்., நாகேஷ்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு

# விளம்பரம்

## திரு. சி. எல். செபஸ்தியான் பீ. ஏ. ஆசிரியர்

புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார்

எமது கல்லூரியில் கடந்த 38 வருடங்களாகக் கடமை யாற்றிய ஆசிரியர் சி. எல். செபஸ்தியான் (பீ. ஏ. மாஸ்டர்) அவர்கள் 1-8-65 அன்று தமது சேவையிலிருந்து இளைப் பாறுகிறார் என்பதை அவரின் பழைய மாணவர்களுக்கும், அன்பர்களுக்கும் அறியத்தருகிறோம். தனி அழைப்புக்கள் இல்லை. இவ்விடயத்தில் ஆர்வம் காட்டுபவர்கள் அதிபருடன் தொடர்புகொள்ளவும்.

அதிபர்,
புனித சவேரியார் கல்லூரி,
187 மன்னார்.


# உற்பத்திப்பெருக்கத்தில் ஆர்வம் வேண்டும்'

## உப சபாநாயகர் வேண்டுகோள்

சிலாபம், புதன்

"வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துக்கொண்டு போவதே இன்று நாட்டை எதிர் நோக்கியுள்ள முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. அரசாங்கம் இப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கான முழு முயற்சியையும் எடுத்துள்ளது. எவ்வளவுதான் வெளிநாட்டு உதவியைப் பெற்றாலும், நமது நாட்டிலே உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் நாம் ஆர்வம் காட்டாவிட்டால் வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கும் பிரச்சினையை ஒருபொழுதும் தீர்த்துவைக்க முடியாது" என்று உப சபாநாயகர் திரு. எஸ். வி. சேர்லி கொரியா மெட்டகமாவில் தமக்களிக்கப் பட்ட வரவேற்புபசாரக் கூட்டமொன்றில் பேசுகையில்குறிப்பிட்டார்.

"தமிழர்களுக்கு இந்நாட்டை நாம் விற்றுவிட்டதாக ஒரு சாரார் பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆனால் இந்த நாட்டிலே எல்லா இனத்தவரிடையேயும் ஒரு ஒற்றுமையை உருவாக்கி மத்திய அரசாங்கமொன்றை அமைத்த பெருமை எமது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியையே சாரும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் கடும் வரட்சி

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சிப்பகுதி, தண்ணீர்ப் பஞ்சம், வெப்பம் காரணமாக வரண்ட பாலைவனமாக மாறிவருகின்றதென நமது நிருபர் தெரிவித்துள்ளார்.

இரணைமடுக் குளத்தின் நீர் மிகவும் மோசமான நிலைக்குச் சென்றுள்ளதென்றும், விவசாயிகள் வேளாண்மை செய்ய முடியாது பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வீடுகள்தோறும் உள்ள கிணறுகளில் தண்ணீர்வற்றி மிகவும் மோசமான நிலையிலிருக்கிறதென்றும், இங்குள்ள தண்ணீர்ப்பஞ்சம் வெப்பம் காரணமாக ஒவ்வொரு வீடுகளிலும் பலர் 'நோயாளர்களாகிக்கொண்டிருக்கிறார்களென்றும்கூறப்படுகிறது.

இங்குள்ள கால்நடைகள் வாய்க்காலில் குடிநீரில்லாமல் நாள்தோறும் இறந்தபடியே இருக்கின்றனவென்றும், கிளிநொச்சி கிராமசேவையாளர் பிரிவில் இந்த மாதத்தில் மட்டும் பதினைந்துபேர் அனலில் நோய்வாய்ப்பட்டு இறந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இங்குள்ள மக்கள் மிகவும் பீதியும் கவலையும் அடைந்திருக்கின்றனர்.

# வரி விளம்பரம்


### தேவை

வெளியூர்களில் வானில் சென்று விற்பனை செய்யக்கூடியவர் தேவை, ரொக்கப்பிணை ரூ. 1000/- உழுதிப்பிணை ரூ. 1000/- நேரில் வரவும் வடபகுதி வர்த்தக நிலையம், ஸ்ரேசன் றோட், சுன்னாகம். 332

பெண் குமாஸ்தா உடனடியாகத் தேவை. நேரில் வரவும், வடபகுதி வர்த்தக நிலையம், ஸ்ரேசன் றோட், சுன்னாகம். 331

### கல்வி

ஜி. சி. இ. உயர்தரம் கலை/விஞ்ஞானம், ஜி. சி. இ சாதாரணம் கலை/விஞ்ஞானம், வர்த்தகம், ஜி. சி. இ. முதல்வருடம் விஞ்ஞானம் ஆகியவற்றிற்கு மிகவும் சிறந்த முறையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன யுனைட்டெட் இன்ஸ்ரிரியூஸ், கொக்குவில், சரவணை வீதி, (?) 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 354

### காணவில்லை

கே. இராசநாயகம், ஆர். இராஜேஸ்வரி ஆகிய பெயர்களைக் கொண்ட இரு கூப்பன்களைக் காணவில்லை. கண்டெடுத்தோர் தயவுசெய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 359

தொய்வு, காசம், நீரிழிவு, வெண்மை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள 83 ஸ்ரீ 800 தொடர் இலக்கமுள்ள "போர்ட்சன்" வான் விற்பனைக்கிருக்கிறது. விபரங்களுக்கு: 52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 361

EL 6000 தொடர் பன்ரம் 1 . 75 மோட்டார் சைக்கிள் மிகத் திறமான நிலையில்— ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 362

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 217/A இலக்க வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. வீடு அடங்கிய வளவின் விஸ்தீரணம் இரண்டு லாச்சம் 4 1/2 குளி வாங்க விரும்புவோர் யாழ்ப்பாணம் 108 மெயின் வீதியில் உள்ள திரு. V. நவரெத்தினம் (புரக்டர்) அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் 360


# நல்ல நெல்விளைச்சல்

பம்பலப்பிட்டி, புதன்

"கடந்த ஆண்டு நெல்விளைச்சல் மிகவும் கூடியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வெள்ளம் முதலிய இடையூறுகள் இல்லாவிட்டால் நெல்விளைச்சல் மேலும் அதிகரித்திருக்கும்" என்று சமத்தொழில் அதிகாரி திரு. ஜே. வி. பொன்சேகா தனது இலாகாவினால் நடாத்தப்பட்ட ஒரு மதிப்பீட்டின்பின்னர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.


# அறிவித்தல்

## கருநாவற்பற்று தெற்கு கிராமசபை

ஒலுமடு, மாங்குளம்

"நச்சட்டம்பன் குடியேற்றப் பாதை திருத்த வேலைக்கு (10,000 ரூபாவுக்கு) பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்பத்திரங்களை அக்கிராசனரிடம் இருந்து 18-6-65-க்கு முன் முற்பணமாக ரூபா 10/-ம், பத்திரப்பணமாக ரூபா 10/-ம் கட்டிப்பெற்றுக்கொள்ள வேண்டும். (போம்பணம் ரூபா 10/-ம திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது.) விண்ணப்பங்கள் யாவும் அக்கிராசனருக்கு 23-6-65 காலை 10 மணிக்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும். அதே நேரத்தில் விண்ணப்பங்கள் உ. ஆ. உ. அதிபர் (வவுனியா) க்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விபரங்கள் யாவும் கிராம [illegible] அலுவலகத்திலும் உ. [illegible] அதிபர் அலுவலகத்திலும் அலுவலகநேரங்களில் பார்வையிடலாம்.

வே. பொன்னையா
197 கி. ச. அக்கிராசனர்.


# கி. மு. தலைவர் மறைவுக்கு அனுதாபம்

காரைவற்றுறை, புதன்

சரவணை கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றிய திரு. எம். மருதையனாரின் மறைவு குறித்து சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மேற்படி சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் "அனுதாபத் தீர்மானம்" நிறைவேற்றப்பட்டது. சபையோர் இரண்டு நிமிடம் எழுந்துநின்று காலஞ்சென்ற தலைவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

உப தலைவர் திரு. கா. தம்பிஐயா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மறைந்த தலைவரின் ஞாபகார்த்தமாக "நினைவுமலர்" ஒன்றை சங்கத்தின் சார்பில் வெளியிடவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தின் தற்காலிக தலைவராக திரு. அ. பேரம்பலம் தெரிவு செய்யப்பட்டார்.

# அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம்

காங்கேசன்துறை, புதன்

ஊறணி புனித அந்தோனியார் கோவில் வருடாந்தஉற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். வெள்ளிக்கிழமை தொடக்கம் பத்துநாள் நவநாள் நடைபெறும். 13-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் திருச்சொரூப சுற்றுப்பிரகாரம்நடைபெறும்.

14-ம் திகதி காலை 7-30மணியளவில் திருநாள் பாடற்பூஜையுடன் பூர்த்தியாகும்.

# புதிய பஞ்சாயம் தெரிவு

காரைவற்றுறை, செவ்

சரவணை-நாரந்தனை ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் பரிபாலன மகாசபைக் கூட்டம் தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. பற்றிக் தலைமையில் நடைபெற்றது.

கடந்த கூட்டத்தில பஞ்சாயத்தார் தெரிவின் போது இரு கோஷ்டியினரிடையே ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தை இக் கூட்டத்தின் மூலம் காரியாதிகாரி தீர்த்துவைத்தார். நாரந்தனைக் கிராமசேவகர், சரவணைக்கிராமசேவகர் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பின்வருபவர்கள் புதிய பஞ்சாயத்தாராகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

திரு. ஏ. எஸ் நாகலிங்கம், திரு. என். நடராசா, திரு. மு. திருநாவுக்கரசு (காரியஸ்தர்) திரு. கா. அருணாசலம், திரு. சி. சுப்பிரமணியம்.

இம்மாதம் 4-ம் திகதி மேற்படி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தைத் தொடர்ந்து நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# அம்பாள் ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

நாளை நடைபெறும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய 9ந் திருவிழாவில் ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதர 'பாலாம்பிகையின் பரிசு' என்னும் பொருள்பற்றிக் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

# வானொலி நிகழ்ச்சிகள்

## வியாழன் 3-6-65

### கொழும்பு

(செய்திகள் காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 5-50 சைவநற்சிந்தனை. 6-55 இஸ்லாமியநற்சிந்தனை 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இலலாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்தநில வாழ்த்துக்கள், 6-00 தூவர் மன்றம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 சங்கீதவகுப்பு. 7-00 பேச்சு—'சொல்லில் கவி அழகு' —எஸ். சின்னத்தம்பி, 7-15 வயலின், 7-45 நாடகம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தாள வாத்தியக்கச்சேரி, 9-30 நேயர்விருப்பம், 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

# "சிவதாண்டவ நிலை"

நல்லூர், புதன்

"மெஞ்ஞானியின் கருத்திலைக் கவர்ந்த நடேசப் பெருமானின் சிவதாண்டவநிலை சைவத்தின் மேன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. சிவநடனமும் ஐந்தொழில் விளக்கமும் பற்றி ஒவ்வொருசைவனும் அறிந்திருக்கவேண்டிய தவசியம் இதை ஒவ்வொரு சைவ ஆசிரியரும் அறிந்திருப்பதால் எமது வருங்கால சந்ததியார் அறிய வழிவகுக்கும்" இவ்வாறு நல்லூர் ஆசிரியகலாசாலையில் நடைபெற்ற இந்துமாமன்றக் கூட்டத்தில் உரையாற்றிய சைவப்புலவர் திரு. சி. வல்லிபுரம் குறிப்பிட்டார்.

"சீதையும் பெண்மையும்" என்ற விஷயம்பற்றி பேசிய கவிஞர் செல்லையா "கம்பராமாயணத்தில் பேசப்படும் பெண்மைக்கும் தற்காலத்தில் நாம் கருதும் பெண்மைக்கும் பலத்த வேறுபாடு உண்டு என்றும் இராமாயணத்துச் சீதையின் பெண்மையைக்கொண்டு இராவணின் ஆண்மைக்குப் புகழ்தேடிக் கொடுக்கின்றார் கம்பர் என்றும் அதேபோல தற்காலத்திலும் ஆண்மை வலுவடைய வேண்டுமாயின் அதற்குப் பெண்மையும் உறுதுணையாக அமையவேண்டும் என்றும் கூறினார்.

திரு. ச. கதிரமலை தலைமையில் கூட்டம் நடைபெற்றது. மன்றச்செயலாளர் திரு. கா. நடேசன் நன்றியுரை கூறினார்.

# விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

காங்கேசன்துறை அமெரிக்க மிஷன் ஆங்கில பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி 5-ந் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும். டாக்டர் எம். வேதாரணியம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

# தற்பாதுகாப்பு வகுப்பு

வெள்ளவத்தை, புதன்

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் கடந்த மாதம் 30-ந் திகதி தொடக்கம் தற்பாதுகாப்பு முறைகள் எனப்படும் 'யூடோ' வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வகுப்புகள் ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும்நடாத்தப்படுகின்றன. திரு. வ். சண்முகம் இவ்வகுப்புகளை நடத்துகின்றார்.

# போதனாசிரியருக்கு பிரிவுபசாரம்

நல்லூர், புதன்

நல்லூர் அரசினர் ஆசிரிய கலாசாலையில் கடந்த ஆறு மாத காலமாக விவசாயப் போதனாசிரியராகக் கடமையாற்றி நேற்று முதல் அட்டாளைச்சேனை முஸ்லிம் ஆசிரியகலாசாலைக்கு இடமாற்றலாகிச் செல்லும் திரு. கே. சுந்தரத்திற்கு கலாசாலை மாணவர்களால் பிரிவுபசார விருந்து அளிக்கப்பட்டது. அவரது சேவையைப் பாராட்டிக் கலாசாலை அதிபர் திரு. ஜே. சி. அரசரத்தினம், பேராசிரியர் கே. எஸ். நடராசா, மாணவர் சங்கத் தலைவர் வ. தியாகராசா ஆகியோர் உரையாற்றினர். திரு. கே. சுந்தரம் நன்றிதெரிவித்தார்.

# நிரந்தரக் காரியதரிசி யாழ்ப்பாணம் வருவார்

குரும்பசிட்டி, புதன்

உள்நாட்டு விவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. எச். சி. குணவர்த்தன எதிர்வரும் 12-ந் தேதி சனி கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருக்கிறார். மல்லாகத்தில் வலிகாமம் வடக்கு கிராமமுன்னேற்றச் சங்கங்களினது சமாஜ ஆதரவில் நடைபெறவிருக்கும் சருக்கரங்கிளை ஆரம்பித்து வைப்பதற்காகவே திரு. குணவர்த்தனா வருகை [illegible] தருகிறார்.

# ரூட்டிங் ஸ்ரார்ஸ் வெற்றி

சுழிபுரம், புதன்

சுழிபுரம் ரூட்டிங் ஸ்ரார்ஸ் கோஷ்டிக்கும் தெல்லிப்பழை இளைஞர் கோஷ்டிக்குமிடையே சினேகபூர்வமாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சுழிபுரம் ரூட்டிங் ஸ்ரார்ஸ் கோஷ்டியினர் 28 அதிகப்படியான ஓட்டங்களைப்பெற்று வெற்றி பெற்றனர். போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

# அபிவிருத்தியில் அரசாங்கம்அக்கறை

பம்பலப்பிட்டி, புதன்

கமத்தொழில் கைத்தொழில் துறையில் பெருமளவிற்கு அபிவிருத்தி உண்டாகும் பொருட்டு அரசாங்கம் எதிர்வரும் இரு வருடங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளும் எனத் தெரியவருகிறது. இதன் பொருட்டு கமத்தொழில் கைத்தொழில் துறைகளிற்கு வேண்டிய மூலப் பொருட்களை அரசாங்கம் இறக்குமதி செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்துகொடுக்கும் என்றும் தெரியவருகிறது.

# வீடமைப்பு மந்திரியின் நடவடிக்கை

குரும்பசிட்டி, புதன்

தொழில், வீடமைப்பு மந்திரி திரு. எம். எச். முகம்மது யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்தபோது மக்களுக்கு அளித்த வாக்குறுதிப்படி தேசிய வீடமைப்பு காரியாலயத்தின் அலுவலகம் இம்மாதம் மத்தியில் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவிருக்கின்றது. இதற்கான ஏற்பாடுகள் செய்யும்படி மந்திரி வீடமைப்பு பகுதி கமிஷனருக்கு உத்தரவிட்டுள்ளார்.

வெள்ளவத்தை, புதன்

தொழில் இலாகாவைச் சேர்ந்த வேலையாளர் சகாய நிதி அலுவலகத்தில் பணியாற்றிய திரு. வ். கதிரவேலு இம்மாதம் 1-ம் திகதி தொடக்கம் [illegible] இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [illegible]

# ஜா இலங்கை விஜயம்

# ஆசிய-ஆபிரிக்க மகாநாடு குறித்து பேச்சு நடத்துகிறார்

## ரஷ்யாவை அழைக்க இருநாடுகளும் முயற்சி

கொழும்பு, செவ்வாய்

**அண்மையில் அல்ஜீரியா தலைநகர் அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய - ஆபிரிக்க மகாநாடு சம்பந்தமான இலங்கையின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ளவும் இம்மகாநாடு பற்றிய இந்தியாவின் கருத்தை இங்கு தெளிவாக விளக்கும் பொருட்டும் இந்தியவெளிவிவகார இலாகா பொறுப்புஅதிகாரி திரு. ஸி. எஸ். ஜா இன்று கொழும்புக்கு விஜயம்செய்தார். இன்று பகல் திரு. ஜா இலங்கை அதிகாரிகளுடனும் மந்திரிகளுடனும் இதுசம்பந்தமாக பேச்சுக்களை ஆரம்பித்தார். பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.**

ஆசிய-ஆபிரிக்க மகாநாடு பற்றிய பல முக்கிய விஷயங்கள் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தியபின்னர் இந்தியா திரும்பி அதற்கான ஏற்பாடுகளை திரு. ஜா கவனிப்பார். ஆனால் அவர் இலங்கையில் மூன்று நான்கு தினங்கள் தங்கியிருப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**ரஷ்யாவை அழைக்க முயற்சி**

முக்கியமாக ஆசிய - ஆபிரிக்க மகாநாட்டுக்கு சோவியத் யூனியனையும் அழைப்பது குறித்து இலங்கை இந்திய அதிகாரிகள் ஆராய்வார்கள் என்று ராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன. மகாநாட்டுக்கு ரஷ்யாவை அழைப்பது குறித்து இலங்கையின் கருத்தை அறிவதில் திரு. ஜா அதிக அக்கறை கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்கு இலங்கை பூரண இணக்கம் தெரிவிக்கும்என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**இந்திய பிரதிநிதிகள்**

ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் பிரச்னைகளை நேரில் அறியும் பொருட்டு சில இந்திய மந்திரிகள் உட்பட பல அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். திரு. சர்தார் சுவரண் சிங், திரு. தினேஷ்சிங் ஆகியோர் தற்பொழுது வெளிநாடுகளில் இருக்கின்றனர்.

**இலங்கை – இந்தியர் ஒப்பந்தம்**

ஸ்ரீமாவுக்கும் சாஸ்திரிக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட இலங்கை - இந்தியர் ஒப்பந்தம் பற்றியும் இரு தலைவர்களும் நடத்திய பேச்சுக்கள் குறித்தும் இலங்கையில் தற்பொழுது எத்தகைய அபிப்பிராயம் நிலவுகிறது என்பதை விரிவாக ஆராய்வதில் திரு ஜா ஈடுபட்டுள்ளார் எனவும் இதுசம்பந்தமாக அவர் இந்தியவெளிவிவகார அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார் என்றும் கூறப்படுகிறது

**கபூர் பொறுப்பு**

இலங்கையில் முன்னர் இந்திய ஹை-மிஷனராகவிருந்த திரு பி. கே. கபூர் தற்பொழுது இலங்கை - இந்தியர் பிரச்னைக்கு பொறுப்பாக இருக்கிறார். திரு ஸி எஸ் ஜா, வெளிவிவகாரம சம்பந்தப்பட்டவைகளுக்கு பொறுப்பாகவிருக்கின்றபோதிலும் இலங்கை - இந்தியர் பிரச்னை குறித்து அவர் இங்கு பல தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சுரங்க விபத்து: ராணி அனுதாபம்

புதுடில்லி ஜூன் 1

பீஹாரில் அண்மையில் ஏற்பட்ட சுரங்க விபத்து குறித்து பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத், இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு அனுதாபச் செய்தியொன்று அனுப்பியுள்ளார்.

"சுரங்க விபத்து குறித்து அறிந்ததும் நாங்கள் பேரதிர்ச்சிஅடைந்தோம் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நானும் எனது கணவரும் ஆழ்ந்த அனுதாபத்தைத தெரிவித்துக்கொள்கின்றோம்." என்று ராணி தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இச்செய்தி குறித்து ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவிக்கையில், "ராணியும், கோமானும் பரிவுடன் அனுப்பிய செய்தியை நாங்கள் பெரிதும் போற்றுகின்றோம்" என்று கூறினார்.

**கிரிக்கெட்டெஸ்ட்**

## இங்கிலாந்து வென்றது

பார்மிங்ஹாம், ஜூன் 1

இங்கிலாந்துக்கும் நியூஸிலாந்துக்குமிடையே இங்கு நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து ஒன்பது விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

**ஸ்கோர் விபரம்**

இங்கிலாந்து கோஷ்டி: முதல் இன்னிங்ஸ்: 435 ஓட்டங்கள். இரண்டாவது இன்னிங்ஸ்: ஒரு விக்கட் நஷ்டத்துக்கு 95 ஓட்டங்கள்.

நியூஸிலாந்து: முதலாவது இன்னிங்ஸ் 116 ஓட்டங்கள் இரண்டாவது இன்னிங்ஸ் 413 ஓட்டங்கள்.——

## நயினாதீவில் மகா கும்பாபிஷேகம்

காரைநகர், செவ்வாய்

பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 'இராசகோபுர மணிக்கோபுர' பிரதிஷ்டா கும்பாபிஷேகம் இம்மாதம் 10-ந் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் துரிதமாகக் கையாளப்பட்டு வருகிறது.

நயினை பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் தலைமையில் ஐந்து குருக்கள்மார் கும்பாபிஷேக வைபவத்தில் கலந்துகொள்வார்கள் என அறியப்படுகிறது.

## புத்தக வெளியீடு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி ஆசிரியர் திரு ம. பாலசுந்தரன் எழுதியுள்ள 'நவீன ரசாயனம்' எனும் இரசாயன நூல் வெளியீட்டுவிழா யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெறவிருக்கிறது.

யாழ். மத்தியகல்லூரி முன்னாள் அதிபர் திரு ஏ. தம்பர் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த வெளியீட்டுவிழாவில் பல அறிஞர் உரை நிகழ்த்தவிருக்கிறார்கள்.

## கந்தசாமி ஞாபகார்த்ததினம்

யாழ்ப்பாணம், வியா.

1947-ம் வருடம் நடைபெற்ற பொது வேலைநிறுத்தத்தில் உயிர்நீத்த தியாகி கந்தசாமியின் நினைவு தினத்தை அரசாங்க ஊழியர் தொழிற்சங்க சேவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை இம்மாதம் 5-ம் திகதி கொண்டாடவிருக்கிறது.

யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் மாலை 4 30 மணியளவில் நடைபெறவிருக்கும் இந்த நினைவு தினக் கூட்டத்துக்கு அரசாங்க ஊழியர் தொழிற்சங்க சேவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளைத் தலைவர் திரு. எம். ராஜரத்தினம் தலைமை தாங்குவார். பிரபல தொழிற்சங்கவாதிகள் இதில் பங்குகொள்ளவிருக்கின்றனர்

மேற்படி ஞாபகார்த்தக் கூட்டத்தில் தியாகி கந்தசாமியின் தாயாருக்கு பணமுடிப்பு ஒன்றும் வழங்க அ. கு. சே. ச. யாழ். கிளைச் சங்கத்தினர் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளனர்.

## தொழிலாளர் நலனில் மந்திரி அக்கறை

பம்பலப்பிட்டி, புதன்

தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளில் வேலை செய்வோர் சூழ்நிலை எவ்வாறு இருக்கிறதென்பதனையும் அதன் சூழ்நிலை பற்றி உடனடியாக ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி தொழில் மந்திரி தொழில் அதிகாரி திரு. லிங்கன் அபயவீராவைக் கேட்டுள்ளார்.

மந்திரி நேரில் சில தொழிற்சாலைகளைப் பார்வையிட்டபொழுது அங்கே நிலைமை மோசமானதாகவிருந்ததை நேரில் கண்டார், இதனைத் தொடர்ந்தே மேற்கூறப்பட்ட நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

சில சிறு தொழிற்சாலைகளில் தொழிலாளர் தேநீர் அருந்துவதற்கான வசதிகளும் உணவு அருந்தும் அறைகளும் இருக்கவில்லை என்பதை மந்திரி நேரில் சென்று அறிந்தார்.

## சனி, ஞாயிறு வேலை நாள்?

கொழும்பு, செவ்வாய்

சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் வேலைநாட்களாக்கப்பட வேண்டுமென்றும் நான்கு போயா தினங்களும் முழு நாள் விடுமுறையாகப்பட்டு அதற்கு முன்னர் வரும் தினத்தில் அரைநாள் விடுமுறை வழங்கவேண்டுமென்றும் இதுசம்பந்தமாக விசாரணை செய்துவரும் ஐந்து நபர் கமிட்டி சிபார்சு செய்யுமெனத் தெரிய வருகிறது.

## மொழிப்பிரச்னை குறித்து முதன்மந்திரிகள் ஆலோசனை

புதுடில்லி, ஜூன் 1

மொழிப்பிரச்னை குறித்து ராஜ்யமுதன்மந்திரிகள் இன்று புதுடில்லியில் கூடி ஆலோசனைகள் நடத்தினர்.

பிரதமர் சாஸ்திரியின் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேச்சுக்களில் பதினொரு ராஜ்ய முதன்மந்திரிகளும் ஏழு காபினட் மந்திரிகளும் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தை இரண்டுமணி நேரம் வரை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதமர் சாஸ்திரி பேசுகையில், அகில இந்திய பகிரங்க சேவைக் கமிஷனின் போட்டிப் பரீட்சைகளுக்கு பிராந்திய மொழிகளை உபயோகிப்பது குறித்த பகிரங்க சேவைக் கமிஷனின் கருத்துக் கோரப்பட்டிருக்கிறது என்றும் கமிஷன் தெரிவிக்கும் கருத்துக்களைத் தொடர்ந்தே அரசாங்கம் இதுகுறித்து முடிவு செய்யும் என்றும் கூறினார்.

பிரதமர் தெரிவித்த கருத்தைத் தொடர்ந்து ராஜ்ய முதன் மந்திரிகள் மொழிப் பிரச்னை குறித்து விவாதிக்கத் தொடங்கினர்.

# "குற்றங்களின் விபரம் தெரிவிக்கப்படவில்லை"

## 2-வது சதிவழக்கு விசாரணை ஆரம்பம்

கொழும்பு, புதன்

'எதிரிகள் சில குற்றங்கள் புரிந்துள்ளதன் காரணமாக அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதே தவிர அவர்கள் எவ்வித குற்றங்கள் புரிந்துள்ளார்கள் என்பது பற்றி தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை'.

இவ்வாறு இரண்டாவது சதிவழக்கு இன்று நீதியரசர்கள் திரு. அலஸ், திரு ஜி பி ஏ டி' சில்வா, திரு வி மாணிக்கவாசகர் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிகளான டெட்றி அபயசிங்கா, டி அல்விஸ் ஆகியோர் சார்பில் ஆஜரான ஜோர்ஜ்சிட்டி குறிப்பிட்டார்.

திரு சிட்டி தொடர்ந்து தமது வாதத்தில் கூறியதாவது:

டெட்றி அபயசிங்கா, டி' அல்விஸ் ஆகிய இருவரும் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிபந்தனையான மன்னிப்பு சம்பந்தமான அட்டோர்னி ஜெனரலுடன் செய்துகொண்ட எந்த உடன்பாட்டுக்கும் முரணாக நடந்துகொள்ளவில்லை, அவர்கள் தாம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றியுள்ளார்கள்.

இவ்விரு எதிரிகளும் தெளிவான அறிவித்தல் இல்லாமல் பாரதூரமான குற்றச்சாட்டுக்கான விசாரணையில் நிறுத்தப்பட்டுள்ளனர், சட்டப்படி தெளிவற்ற அறிவித்தல் மீதத் தவறுனது இதனால் இந்த விசாரணையில் நடுநிலைத்தீர்ப்பு வழங்கமுடியாத நிலை ஏற்படுகிறது. அட்டோர்னி ஜெனரலுடன் நிபந்தனையுடனான மன்னிப்பு சம்பந்தமாக செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு முரணாக நடந்துகொண்டார்கள் என குற்றம் சாட்டப்படவில்லை நீதமன்ற சட்டவரம்புக்கு மீறியதாகவும் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்படவில்லை.

விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

## ஆசிரியரின் கடமை

கண்டி, புதன்

ஒரு ஜனநாயக நாட்டில் அரசாங்கங்கள் மாறிக்கொண்டிருப்பது தவிர்க்கமுடியாததொன்று; ஆனால் ஆசிரியர்கள் தமது கடமைகளைத் தொடர்ந்து செய்யவேண்டும். ஆசிரியர்கள் தமக்குரிய உரிமைகளுக்காக போராடும் அதே சமயத்தில் எதிர்கால இளைய சந்ததியினரின் கல்வி கருதியும் உழைக்கவேண்டும்: இதனை அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்

இவ்வாறு பகிரங்க ஆசிரியர்களின் சங்கக் கண்டிக்கிளையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கிளைச்சங்கத்தலைவர் திரு என் எல். ஏ. பெரேரா பேசுகையில் தெரிவித்தார்.

திரு. பெரேரா மேலும்பேசுகையில், மேற்படி சங்க அங்கத்தவரின் சம்பளம் பல மாதங்களாகத் தாமதப்பட்டுள்ளது என்றும் சம்பள உயர்வுகள் உரிய நேரத்தில் கொடுபடவில்லையென்றும் தெரிவித்தார்,

## உன்னைச்சொல்லி:..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிகக் கேவலமான நிலையில் சிறிய கவிச் போர்ட்டைக் கொண்டு 7 உபதபாற் கந்தோருக்கு டெலிபோன்சேவைக்கான தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதென்றால் இலேசானகாரியமா என்ன? அதுமட்டுமல்ல வவுனியாவிலே இருக்கும் கச்சேரி, உள்ளூராட்சிமன்ற காரியாலயம் விவசாயக் கந்தோர், கல்விக்கந்தோர், நீர்ப்பாசனக்கந்தோர், போன்ற பல முக்கிய காரியாலயங்களுக்கும் இன்னும்பலகாரியாலயங்களுக்கும் இந்த டெலிபோன் எக்ஸ்சேஞ்தான் தொடர்புகளைஏற்படுத்திக் கொடுக்க வேண்டியிருக்கிறது. நாளொன்றுக்கு சுமார் 400 டெலிபோன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் சமாளிக்கமுடியாத நிலையிலிருக்கும் எக்ஸ்சேஞ்சில் சேவைபுரிபவர்கள தமது கஷ்டங்கள்பற்றி தமதுசங்கம் மூலமாக சம்பந்தப்பட்டவர்களுக்குப்பலதடவைகள் புகார்தெரிவித்தும் இதுவரை எத்தவிதபலனும் கிடைக்கவில்லையெனத்தெரிகிறது.

இவற்றையெல்லாம் செம்மையாகப் புரிந்து கொள்ளாத இங்குள்ள பொதுமக்கள் நாளாந்த டெலிபோன் சேவை தாமதங்களுக்காக எக்ஸ்சேஞ் காரர்கள்மீது கோபப்படுகிறார்களாம், என்னசெய்வது!

## திருமண அழைப்பு

**சிவபாலன் - சேதுரத்தினம்**

எங்கள் புதல்வன் செல்வன் சிவபாலன் (கணக்குப் பரிசோதனைத் திணைக்களம் கொழும்பு) அவர்களுக்கும், கம்பளை நகைவியாபாரம் ப. நடேசபிள்ளை அவர்களின் புதல்வி செல்வி சேதுரத்தினத்துக்கும் நிகழும் வைகாசி மாதம் 23-ம் திகதி (5-6-65) சனிக்கிழமை பகல் 12-30 வரையில் வரும் சுபவேளையில் இன்பர்சிட்டி சித்திவிநாயகர் ஆலயத்தில் நிகழும் திருமணத்தின் போது உறவினர், அன்பர்கள் சமுகந்தந்து எம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

அன்புள்ள
மு உ. மு. சுவாமிநாதன்
தம்பதிகள்

ப. நடேசபிள்ளை
வியாபாரிமூலை,
பருத்தித்துறை. 863

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட்டுக்காக அதன் ஜெனரல் மானேஜர் ... யாழ்ப்பாணம் ... இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.